# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2020ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | | |
|---|---|---|---|
| 30.06.2020 . | 1) தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலம் சத்திரம் தெரு, கழிவு நீரேற்று நிலையம் குரூஸ்புரம் நிலையம், மேற்கு மண்டலம் பகுதி பாளைரோடு மார்கெட் சந்திப்பு கழிவு நீரேற்று நிலையம் மற்றும் மைய அலுவலகம் 250 KVA ஜெனரேட்டர் ஆகிய பணியிடங்களில் உள்ள மோட்டார்கள் இயக்கவும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் கடந்த 01.07.2019 முதல் ஓராண்டிற்கு மாமன்றத் தீர்மான எண். 136 நாள் 26.07.2019ன் ஒப்புதல் படி கீழ்க்கண்ட பணியாட்களை நகர்புற வாழ்வாதார மையம் (City Livehood Centre) மூலம் பெற்று பணிபுரிந்து வருகின்றனர். | | 109) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| வ.எண் | பணியின் தன்மை | நபர்கள் | TWAD schedule of Rate (2019-2020 Per day |
| 1 | பம்ப் ஆப்ரேட்டர் (without LTD) | 2 | 520 |
| 2 | பம்ப் ஆப்ரேட்டர் (With I.T.I. or Diploma) | 1 | 520 |
| 3 | கிளீனர் (Drainage) | 2 | 468.60 |
| | மேற்படி மனித ஆற்றல்களை நகர்புற வாழ்வாதார மையம் (City livehood centre) மூலம் TWAD 2019-2020ம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட தினசரி ஊதிய அடிப்படையில் 01.07.2020 முதல் ஓர் ஆண்டிற்கு தற்காலிக அடிப்படையில் ஈடுபடுத்திக் கொள்ளவும், இதற்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ. 9.15 லட்சத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>ந.க.எண். 2396/இ5/2019 | | |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சி மைய அலுவலகம், கிழக்கு மேற்கு வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் நடைபெறும் அலுவலக பணிகள் வருவாய் மற்றும் குடிநீர் பணிகளுக்கு கேட்பு எழுப்புதல் பணியை கனினியில் மேற்கொள்ளவும், சொத்து வரி பொது சீராய்வு பணி கனினியில் பதிவேற்றம் செய்யவும் மற்றும் பொறியியல் பிரிவு பணிக்கான மதிப்பீடு தயாரிப்பது போன்ற பணிகளை விரைந்து முடிக்கவும் கணினி இயக்குபவர்கள் (Data Entry Operator ) மொத்தம் 10 நபர்களை, நகர்புற வாழ்வாதார மையம் (City Livehood centre) மூலம் 2017–2018ம் ஆண்டுக்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி ஊதிய அடிப்படையில் 01.01.2020 முதல் ஓராண்டு காலத்திற்கு,. 10 நபர்களை தற்காலிக அடிப்படையில் | | 110) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ஈடுபடுத்திக்கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ஓராண்டிற்கு ரூ. 9.80 லட்சத்தினை பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1)மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2)மேற்படி பணியாளர்களுக்கு 01.01.2020 முதல் 30.06.2020 வரை ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஊதியம் வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். இ5/01576/2018 | |
| | 3) தூத்துக்குடி பழைய பேருந்து நிலையத்தில் (தற்காலிகம், மைதானம் S.A.V.) இயங்கி வந்த தற்காலிக தினசரி காய்கனி சந்தை கொரோனா வைரஸ் (COVID – 19) தொற்று பரவல் தடுக்கும் நடவடிக்கை முன்னிட்டும் பொது மக்கள் தனிநபர் சமூக இடைவெளி கடைபிடிக்கும் பொருட்டு மாற்று ஏற்பாடாக மேற்படி தற்காலிக தினசரி சந்தை 01.06.2020 முதல் புதிய பேருந்து நிலைய வளாக காலியிடத்திலும் வ.உ.சி. கல்லூரியிலிருந்து இசக்கியம்மன்கோவில் வரை உள்ள காலியிடத்திலும் செயல்பட்டு வருகிறது. மேற்படி தினசரி சந்தையில் (தற்காலிகம்) உள்ள கடைகளுக்கு இம்மாநகராட்சி பணியாளர்கள் மூலம் தினசரி தரை வாடகை சிறிய கடைகளுக்கு ரூ. 50/— எனவும் பெரிய கடைகளுக்கு ரூ. 120/— என தினசரி கட்டண வசூல் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் உள்ளூர் சந்தை நிலவர மதிப்பீட்டின் படியும், இம்மாநகராட்சியின் நிதி ஆதாரத்தை பெருக்கும் பொருட்டு மேற்படி தற்காலிக தினசரி சந்தை கடைகளுக்கு தினசரி தரை வாடகை 15.06.2020 முதல் சிறிய கடைகளுக்கு ரூ. 100/— எனவும் பெரிய கடைகளுக்கு ரூ. 250/— என உயர்த்தி நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். அ16/29/19 | 111) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.30.06.2020

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி